



ஜமாலியன் டைம்ஸ்

JAMALIAN TIMES

இதழ் 6 சுற்று 7 | அக்டோபர், நவம்பர் 2022




### திருச்சி ஜமால் முகமது கல்லூரியில்: மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை சார்பில்

# மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம்: மாண்புமிகு அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், கே.என்.நேரு பங்கேற்பு



திருச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு புதிய கட்டிடம் கட்டித்தரப்படும் என்றும், மருத்துவத்துறையில் காலியாக உள்ள 4 ஆயிரத்து 308 பணியிடங்கள் நிரப்பப்படும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

**ஆய்வு கூட்டம்**

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை சார்பில் பருவகால பேரிடர் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை காய்ச்சல் முகாம்கள் மற்றும் பொது சுகாதார பணிகள் குறித்த மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமை தாங்கினார். மாவட்ட கலெக்டர் பிரதீப் குமார் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மை செயலாளர் செந்தில்குமார் மற்றும் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் மாண்புமிகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:– எதிர்காலத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறையில் நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படை பிரச்சினைகள் குறித்தும், அதற்கு தீர்வு காணும் வகையில் அதிகாரிகளுடன் ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட உள்ளது. இதில் வடகிழக்கு பருவமழை மற்றும் அதனால் ஏற்படும் டெங்கு, மலேரியா உள்ளிட்ட நோய் பாதிப்புகள் குறித்தும் அதனை தடுப்பது தொடர்பான நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட உள்ளது.


மாண்புமிகு முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் 78 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை அறிவித்தார். இந்த மையங்கள் 21 மாநகராட்சி மற்றும் 63 நகராட்சிகளில் அமைவதற்கான பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. அத்துடன் 389 நடமாடும் மருத்துவ வாகனங்கள் உள்ளிட்ட நடைமுறையில் உள்ள சுகாதாரப் பணிகளுக்கான திட்டங்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட உள்ளது.

**4,308 காலி பணியிடங்கள் நிரப்பப்படும்**

தமிழகத்தில் இன்னும் 2 மாதத்தில் மருத்துவத்துறையில் காலியாக உள்ள 4,308 பணியிடங்கள் நிரப்பப்படும். இதில் ஒவ்வொரு துறையாக காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகிறது. திருச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு புதிய கட்டிடம் கட்டுவது தொடர்பாக சுகாதாரப் பணிகள் இணை இயக்குனரிடம் அறிக்கையை கேட்கப்பட்டுள்ளது. அவர் அளிக்கும் தகவலின் அடிப்படையில் அடுத்த நிதியாண்டில் அதற்கான பணிகள் மற்றும் நடவடிக்கைகள் தொடங்கும்.

**புற்றுநோய் ஆராய்ச்சி மையம்**

காஞ்சீபுரத்தில் சுமார் ரூ.300 கோடி செலவில் புற்று நோய் ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் தற்போது 6 லட்சத்து 90 ஆயிரம் கொரோனா தடுப்பூசிகள் இருப்பில் உள்ளன. முதல் டோஸ் தடுப்பூசி 96 சதவீதம் பேரும், 2–வது டோஸ் தடுப்பூசி 92 சதவீதம் பேரும் செலுத்திக் கொண்டு உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார். முன்னதாக திருச்சி மாவட்டத்துக்கு என்று தயாரிக்கப் பட்ட தொலைநோக்குதிட்ட கையேட்டை மாண்புமிகு அமைச்சர் கே.என்.நேரு, மாண்புமிகு அமைச்சர் மா.சுப்பிரமணியனிடம் வழங்கினார்.





A DISCUSSION ON

## TAMIL NADU STATE NEW EDUCATIONAL POLICY







## FINE ARTS AWARD

Date : 10.10.2022 Time: 6.00 p.m. Venue : Office of the Principal



### தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு

## அரபு முதுகலை மற்றும் ஆராய்ச்சித்துறை சார்பாக சிறப்பு சொற்பொழிவு




தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு, 08.11.2022 அன்று ஜமால் முஹம்மது கல்லூரி அரபு முதுகலை மற்றும் ஆராய்ச்சித்துறையின் இக்ரா பிஸ்மி அரபி சங்கம், கல்லூரியின் பாலினசமத்துவச் சங்கம் மற்றும் போதை ஒழிப்போர் கழகம் சார்பாக சிறப்புச் சொற்பொழிவு கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.இஸ்மாயில் முஹைதீன் தலைமை வகித்தார்.

திருச்சி ஹர்ஷமித்ரா சூப்பர் ஸ்பெஷாலிட்டி கேன்சர் சென்டர் மற்றும் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் நிர்வாக இயக்குநர் டாக்டர் ஜி.கோவிந்தராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே. காஜா நஜீமுதீன் வாழ்த்துரை வழங்கினார். அரபு துறைத்தலைவர் முனைவர் எம்.அப்துல் காதர் வரவேற்றார். நிகழ்ச்சியில் பிறத்துறை பேராசிரியர்கள்,மாணவர்கள் உள்பட 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

டாக்டர் ஜி.கோவிந்தராஜ் தன்னுரையில் புகையிலையின் பயன்பாடு பற்றி கடுமையாக எச்சரித்தார்.ஏறத்தாழ 75% சதவிகித மக்கள் புற்றுநோயால் பாதிக்கப்படுவதற்கு முக்கியக்காரணம் புகையிலையே என்பதை வலியுறுத்தினார். மேலும் மாணவர்கள் புகையிலை வேண்டாம் என்று கூறி புகையிலை இல்லாத உலகை உருவாக்க உறுதி கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். புற்றுநோய், அதன் தடுப்பு மற்றும் அதன் பின் விளைவுகள் தொடர்பான பல முக்கிய அம்சங்களைக் கொண்ட சிறந்ததொரு உரையை வழங்கினார். முனைவர் எம்.கே.அலி இப்ராஹிம் நன்றியுரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியை பாலின சமத்துவ சங்கத்தின் ஆலோசகர் முனைவர் அ.அப்துல் ரஷீத் மற்றும் போதை ஒழிப்பு சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் எம்.முஹம்மது இஸ்மாயில் சிறந்த முறையில் ஒருங்கிணைத்தனர்.

Former Prof. & Controller of Examinations

Dr. S.M.Mazhar Nazeeb Khan

## CONTRIBUTION TO THE GLOBAL JAMALIANS BLOCK





Entrepreneurship Development Cell of Jamal Mohamed College opened STUDENTS RETAIL OUTLET on 19.10.2022



MoU with Emory University
Date : 06.10.2022



Department of Mathematics - Three-day workshop on Fundamentals of Probability Theory and Detection Estimation Theory



Awareness on Innovation Voucher Programme - Birthday of former President A.P.J. Abdul Kalam on 15.10. 2022



POLICE COMMEMORATION DAY – 2022
COMMEMORATION DAY AWARNESS RALLY
Date : 19.10.2022

ஜமாலியன் டைம்ஸ்

தமிழ் மாத இதழ்

**ஆசிரியர்**
முனைவர். எஸ். இஸ்மாயில் முகைதீன்
M.Sc., M.Phil., PGDCA., Ph.D.,
கல்லூரி முதல்வர்

**செய்தி ஆசிரியர்**
முனைவர். A.R. முஹம்மத் ஷாநவாஸ்
M.Sc.,PGDCA.,M.Ed.,M.Phil.,Ph.D.,

**இணை ஆசிரியர்கள்**
K. சண்முக வேலாயுதம் M.A., M.Phil.,SET.,
R. ராஜேஷ்குமார் M.A., M.Phil.

**ஆசிரியர் குழு**
உதவிப் பேராசிரியர்கள், காட்சித் தொடர்பியல் துறை
B. ராமகிருஷ்ணன் M.F.A.,M.Phil.,
முனைவர் S. ரகுநாதன் M.A., PGDAPR., MA., Ph.D.,
D. பிரதீபன் M.Sc., SET.,
G. பரணீதரன் M.Sc.,
H. முஹம்மத் பயாஸ் M.Sc.,
மாணவர்கள், காட்சித் தொடர்பியல் துறை
V. சிவகுமார், A. முகமது அய்மன்

**நிருபர்கள்**
K. காவியச்செல்வன், R. வெற்றி செல்வன்,
P. பிரபு மணிகண்டன், T.M. கரண்

**ஒளிப்படக் கலைஞர்கள்**
K. அரவிந்த் குமார், J. டென்சில் டொமினிக்,
S. அருண்குமார், R.பாலசுப்ரமணியன்

**தொடர்புக்கு**
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி – 620 020

காட்சித் தொடர்பியல் துறையின் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக வெளியிடப்படும் ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் தொடர்ந்து வெளிவர தங்களின் கருத்துக்கள், படைப்புகள், மற்றும் துறை செய்திகளை எங்களுக்கு அனுப்பவும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**
துறைத்தலைவர்
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி – 620 020
jmcviscom@gmail.com

மாணவர்களின் பயிற்சிக்காக வெளியிடப்படும் இந்த இதழில் வரும் கருத்துக்கள் அனைத்தும் துறையின் கருத்தல்ல.

'ஜமாலியன் டைம்ஸ்' மாத இதழுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் மக்கள் குரலுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் பப்ளிகேஷன்ஸ் சார்பாக அச்சிடுவோர்
மக்கள் குரல் நடுநிலை நாளேடு TRINITY MIRROR

**துறைத் தலைவர்கள் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கு ஒரு வேண்டுகோள்**

ஜமாலியன் டைம்ஸ் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது உங்கள் கருத்துக்களை தமிழில் எழுதி கடிதம் மூலமாகவோ அல்லது ஈமெயில் மூலமாகவோ அனுப்பலாம். அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர்,
ஜமாலியன் டைம்ஸ்,
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி – 620020
jmcviscom@gmail.com

## உலக பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு

# பெண் குழந்தைகள் தின விழிப்புணர்வுப் பேரணி




உலக பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு திருச்சியில் செவ்வாய்க்கிழமை விழிப்புணர்வு நடைப்பேரணி (வாக்கத்தான்) நடைபெற்றது.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் பாலின சமத்துவச் சங்கம், போதை ஒழிப்போர் கழகம் ஆகியவை இணைந்து காஜாமலை பகுதியிலுள்ள கல்லூரி வளாகத்தில் இருந்து பேரணியை தொடங்கிவைத்த கல்லூரிச் செயலர் ஏ.கே. காஜா நஜிமுதீன் பின்னர் கூறியது:

பெண் சிசுக்கொலைகளை தடுத்து, பாலின சமத்துவமின்மையைக் குறைக்கவும், பெண் குழந்தைகளுக்கான சமத்துவம், உரிமையை நிலைநாட்டவும் பெண் குழந்தைகளை கௌரவிக்கவும், ஊக்குவிக்கவும் சர்வதேச பெண் குழந்தைகள் தினமானது 2012 ஆம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்நாளில், பெண் குழந்தைகள் குறித்து சமூகத்தில் இருக்கும் பிற்போக்கு எண்ணங்களை போக்கி, ஆரோக்கியமான சமூக மாற்றத்தை உருவாக்க விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. இந்த நாளில் சமூகத்தில் பெண் குழந்தைகளுக்கான அங்கீகாரம் மற்றும் முழுச் சுதந்திரம் கிடைக்க ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற விழிப்புணர்வு பிரசாரத்தை மேற்கொள்ளவேண்டும் என்றார்.

கல்லூரியின் பொருளாளர் ஜமால் முஹம்மது, முதல்வர் இஸ்மாயில் முகைதீன், இயக்குநர் அப்துல் காதர் நிஹால், விருதி ஒருங்கிணைப்பாளர் நாகூர்கனி, ஒருங்கிணைப் பாளர் ஷேக் இஸ்மாயில், பாலின சமத்துவ சங்க ஆலோசகர் அப்துல் ரசீத், போதை ஒழிப்போர் கழக ஆலோசகர் முகமது இஸ்மாயில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பேரணியானது கல்லூரியிலிருந்து தொடங்கி திருச்சி அஞ்சல் நிலையம் வரை சென்று மீண்டும் கல்லூரியை அடைந்தது. பெண் குழந்தைகளைப் பேணிக்காத்தல், போதை ஒழிப்பு தொடர்பாக விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியபடி 400–க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

## 9 மாவட்ட கல்லூரிகளுக்கு இடையிலான

# மகளிர் பேட்மின்டன் போட்டிகள் ஜமால் சாம்பியன்



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட திருச்சி, தஞ்சை, நாகை, திருவாரூர், அரியலூர், பெரம்பலூர், கரூர், புதுகை உள்ளிட்ட 9 மாவட்ட கல்லூரிகளுக்கு இடையிலான மகளிர் பேட்மின்டன் போட்டிகள் திருச்சியில் நடந்தது.

17 கல்லூரிகள் கலந்து கொண்ட போட்டியில் ஜமால் முகமது கல்லூரி.3—0 என்ற செட் கணக்கில் கும்பகோணம் இதயா கல்லூரியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. 3வது இடத்திற்கான போட்டியில் பிஷப் ஹீபர் கல்லூரி 2—0 என்ற செட் கணக்கில் பாரதிதாசன் பல்கலைக்கழக அணியை வீழ்த்தியது.

சாம்பியன் பட்டம் வென்ற ஜமால் முகமது கல்லூரி வீராங்கனைகளை கல்லூரி செயலாளர் காஜா நஜிமுதீன், முதல்வர் இஸ்மாயில் முகைதீன்,உடற்கல்வி இயக்குனர் சாயின் ஷா ஆகியோர் பாராட்டினர்.



ACADEMIC COUNCIL COMMITTEE MEETING - DATE : 17.11.2022

## கணிதத்துறை, DBT நட்சத்திரக் கல்லூரித்திட்டத்தின் சார்பில்

# மூன்று நாள் பயிற்சி பட்டறை



திருச்சி ஜமால் முகமது கல்லூரி கணிதத்துறை, டிபிடீ நட்சத்திரக் கல்லூரித்திட்டத்தின் சார்பில் மூன்றுநாள் பயிற்சிப்பட்டறை அடிப்படை நிகழ்தகவு கோட்பாடு மற்றும் கண்டறிதல் மதிப்பீட்டுக் கோட்பாடு எனும் தலைப்பில் 6.10.2022 முதல் 8.10.2022 வரை நடைபெற்றது.

இப்பயிற்சியினை பென்டகிராம் குழுமம் (இந்தியா, யு.கே. மற்றும் யு.எஸ் நாடுகள்) நிறுவனங்களோடு இணைந்து நடத்தப்பட்டது.

பென்டகிராம் குழும நிறுவனங்களின் தலைவர் முனைவர் ஈ.ஜி.ராஜன் மூன்று நாட்களும் கருத்தாளராககலந்து கொண்டு 16 தலைப்புகளில் 33 கணிதம், இயற்பியல் மற்றும் கணிப்பொறி அறிவியல் துறை சார்ந்த பேராசிரியர்களுக்கு பயிற்சி அளித்தனர்.

இந்நிகழ்வின் துவக்கவிழா 6.10.2022 அன்று கல்லூரி பொருளாளர் எம்.ஜே.ஜமால் முகமது, உதவிச்செயலர் முனைவர். கே.அப்துஸ் சமதுமற்றும் கௌரவ இயக்குநர் முனைவர். கே.என்.அப்துல் காதர் நிகால் ஆகியோர் முன்னிலையில் கல்லூரி முதல்வர் முனைவர். எஸ்.இஸ்மாயில் முகைதீன் தலைமை யுரையுடன் துவங்கியது. முன்னதாக பேராசிரியர்.ஏ.முகமது இஸ்மாயில் வரவேற்பு ரையாற்ற, இறுதியாக பேராசிரியர் எஸ்.வாகிதா கஃபாத்தீன் நன்றியுரையாற்றினார். இந்நிகழ்விற்கான ஏற்பாட்டினை கணிதத்துறைத் தலைவர்(பொ) முனைவர். ஆர்.ஜாகிர் உசேன் மற்றும் துறைப் பேராசிரியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

## பாரதிதாசன் பல்கலைக் கழக அளவிலான மேசை பந்துப் போட்டி: திருச்சி ஜமால் முகமது கல்லூரி

# 7– வது ஆண்டாக சாம்பியன் பட்டம் பெற்று சாதனை



பாரதிதாசன் பல்கலைக் கழக அளவிலான மேசை பந்துப் போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி தொடர்ந்து 7– வது ஆண்டாக சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

பாரதிதாசன் பல்கலைக் கழகத்துக்குட்பட்ட திருச்சி, தஞ்சை, நாகை, திருவாரூர், அரியலூர், பெரம்பலூர், கரூர், புதுகை, மயிலாடுதுறை ஆகிய 9 மாவட்ட கல்லூரிகளுக்கு இடையிலான மாணவர்களுக்கான மேஜை பந்துப் போட்டி திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் திருச்சி, ஜமால் முகமது கல்லூரி, திருவாரூர், மஞ்சக்குடி தயானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியை வென்று முதலிடம் பிடித்தது.
பல்கலைக் கழக அளவில் கல்லூரிக்கு பெருமை சேர்த்த அணிக்கு கல்லூரி நிர்வாகத்தின் சார்பில் செவ்வாய்க்கிழமை பாராட்டுதெரிவிக்கப்பட்டது.

கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே. காஜா நஜிமுதீன், பொருளாளர் எம். ஜமால் முகமது, கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.இஸ்மாயில் முகைதீன், கௌரவ உறுப்பினர் முனைவர் கே.என். அப்துல் காதர் நிஹல், உடற்கல்வி இயக்குநர் பி.எஸ். ஷா இன்ஷா மற்றும் உதவி உடற்கல்வி இயக்குநர் கே. பிரதீப் குமார் ஆகியோர் பாராட்டினர்.இந்த அணிக்கு கல்லூரியின் பல்வேறு துறை பேராசிரியர்கள், துறைத் தலைவர்களும் பாராட்டு தெரிவித்தனர்

# OVERALL WINNERS – MICROGALAXY 2K22



Overall Winners – Microgalaxy 2k22 – an Inter-Collegiate Techno Fest Conducted by Srimad Andavan Arts & Science College, Trichy Date : 31.10.2022 Time: 4.00 p.m. Photo Venue : Our College Garden

பாரதிதாசன் பல்கலை மண்டல அளவிலான கபடி போட்டி

## ஜமால் முகமது கல்லூரி அணி மீண்டும் சாம்பியன்






திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளில் மண்டல அளவிலான கபடி போட்டி. கடந்த அக்டோபர் மாதம் 28,29 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. அதில் அளவில் திருச்சி மண்டல நடைபெற்ற கபடி போட்டி திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்றது. இதில் மொத்தம் 27 கல்லூரிகள் பங்கேற்றன. அதே நாட்களில் தஞ்சாவூர் மண்டலத்திற்கு உட்பட்ட 16 கல்லூரிகள் பங்கேற்ற கபடி போட்டி, புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சேசு கல்லூரியில் நடைபெற்றது. இதில் வெற்றிபெற்ற அணிகளுக்கான லீக் மற்றும் இறுதி போட்டி, நேற்று திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்றது. அதில் திருச்சி மண்டலத்தில் இருந்து ஜமால் முகமது கல்லூரியும், கரூர் கொங்கு கலை அறிவியல் கல்லூரியும், தஞ்சாவூர் மண்டலத்தில் இருந்து பூண்டி புஷ்பம் கல்லூரி அணியும், புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரியும் லீக் போட்டிகளுக்கு தகுதி பெற்றது.

இதில் முதல் லீக்கில் ஜமால் முகமது கல்லூரி. கொங்கு கல்லூரியை 46–32 என்ற புள்ளி கணக்கில் வெற்றி பெற்றது. 2வது லீக்கில் பூண்டி புஷ்பம் கல்லூரி, மாமன்னர் கல்லூரியை 39–35 என்ற புள்ளி கணக்கில் வெற்றி பெற்றது. 3வது லீக்கில் ஜமால் முகமது கல்லூரி, மாமன்னர் கல்லூரியை 75–23 என்ற புள்ளிகணக்கில் வென்றது. 4வது லீக்கில் கொங்கு கல்லூரி, பூண்டி புஷ்பம் கல்லூரியை 36–29 என்ற புள்ளி கணக்கில் வென்றது. 5வது லீக்கில் கொங்கு கல்லூரி மாமன்னர் கல்லூரியை 53– 20 என்ற புள்ளி கணக்கில் வென்றது. 6வது லீக்போட்டியில் ஜமால் முகமது கல்லூரி, பூண்டி புஷ்பம் கல்லூரியை 75–14 என்ற புள்ளி கணக்கில் வெற்றி பெற்று ஒட்டு மொத்த சேம்பியன் பட்டத்தை தக்க வைத்தது.

இதில் கரூர் கொங்கு கல்லூரி அணியானது 2 ஆம் இடத்தை பிடித்தது. ஒரு போட்டியில் வெற்றி பெற்ற பூண்டி புஷ்பம் கல்லூரி அணி மூன்றாவது இடத்தையும், மாமன்னர் கல்லூரி 4வது இடத்தையும் பிடித்தனர். இதில் சேம்பியன் பட்டம் பெற்ற ஜமால் முகமது அணிக்கு சுழற்கோப்பை வழங்கப்பட்டது. இப்போட்டியில் வெற்றி பெற்ற மற்ற அணிகளுக்கு கல்லூரியின் சார்பில் பரிசுகளும், பாராட்டு பத்திரங்களும் வழங்கப்பட்டது.





We thank Prof. Umar Basha (Retd), Department of Physics and Prof.sheik Umar sahith, Department of zoology for their generous contribution of Rs.1 lakh and Rs.1.6 lakh Respectively towards the construction of Global Jamalians Block.

## HODS / COORDINATORS MEETING

Date : 21.10.2022 Time: 9.30 a.m. Venue : Syed Hussainudeen Hall













## STUDENT CORNER

## PHOTOGRAPHY




**A.S.PAARASAN TATA**

**II B.SC. VISUAL COMMUNICATION**